*செ.வெ.எண். 67* *நாள் - 30.06.2020*

**நீலகிரி மாவட்டம், உதகை நகராட்சி மற்றும் கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.06.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

---

நீலகிரி மாவட்டம், உதகை நகராட்சிக்குட்பட்ட டைகர் ஹில், கிரீன்பீல்ட், டேவிஸ்டேல், கேஸ்பஜார் மற்றும் கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட மந்தாடா, எல்லநள்ளி, சிவாநிலையம், உல்லாடா, காமராஜ் நகர், பெரிய பிக்கட்டி ஆகிய தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.06.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கூறியதாவது,

தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மக்களை காக்கும் வகையில் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, நீலகிரி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு தேவையான நிவாரணப் பொருட்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை உள்பட தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள் மற்றும் இதர மாநிலங்களில் இருந்து நீலகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்தவர்கள் இபாஸ் இருந்தமால் மட்டுமே மாவட்டத்திற்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். சளி, காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறி இருந்தால் அவர்களுக்கு சுகாதாரக் குழுக்கள் மூலம் உடனடியாக சளி மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்விற்கு அனுப்பப்பட்டு, நோய் தொற்று உறுதியானால் மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்படுவார்.

நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது 35 தனிமைப்படுத்தப்பட்ட இடங்களை சுகாதாரத்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் பல்வேறு துறைகள் இணைந்து வீடு வீடாக சென்று கண்காணித்து வருகின்றனர். வெளியாட்கள் இந்த தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் செல்லாதவாறு காவல்துறையின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அனைத்து தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு 250 கிராம் பிளீச்சிங் பவுடர், பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பொருட்டு அவர்களுக்கு வைட்டமின்-சி, ஜிங்க் மாத்திரைகள், கபசுரக்குடிநீர், ஆர்சானிக் ஆல்பம்-30 போன்றவைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு உதவும் வகையில் தன்னார்வலர்களை கொண்டு பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலைக்கடைகள் மூலம் வீட்டிற்கே வழங்கப்படும். காய்கறிகள் மற்றும் மளிகைப் பொருட்கள் வீடு வீடாக வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அத்தியாவசியத் தேவைகளுக்கு வீட்டை விட்டு வெளியே வரும்பொழுது கட்டாயம் முகச்கவசம் அணிந்து வர வேண்டும். முகக்கவசம் அணியாமல் வருபவர்களுக்கு பறக்கும் படை மற்றும் வருவாய்த்துறை ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் மூலம் ரூ.50/- அபராதம் விதிக்கப்படும். எனவே பொதுமக்கள் தேவையில்லாத காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியே வராமல் தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறும், அரசு தெரிவிக்கும் வழிமுறைகளை மக்கள் உணர்ந்து நடந்தால் மட்டுமே நீலகிரி மாவட்டத்தை கொரோனா தொற்றில்லா மாவட்டமாக மாற்ற முடியும். மேலும் வெளியிடங்களிலிருந்து தங்கள் பகுதிகளுக்கு வெளியாட்கள வருகை புரிந்தால் உடனடியாக 24 மணி நேரமும் செயல்படும் 1077 என்ற மாவட்ட கட்டுப்பாட்டு மைய எண்ணிற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருமதி.மனோரஞ்சிதம், உதகை நகராட்சி ஆணையாளர் திருமதி.சரஸ்வதி, வட்டார மருத்துவ அலுவலர் திருமதி.சகீராபானு, கேத்தி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.நடராஜ் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட உடனிருந்தனர்.

*வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.*